பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*05 04 2026 SUNDAY 6 30 PM*

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் இதுவரை 170 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கமாக திமுக திகழ்கிறது என்று அக்கட்சி கூறியுள்ளது.

3. திமுக அரசு பல்லாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் புரிந்துள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. ஊழலற்ற நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது என்று நாம் தமிழர் கட்சி தெரிவித்துள்ளது.

5. ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Meenakshi, Jaismine, லோகேஷ் மற்றும் Akash அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து வருவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை, 170 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், 30 கோடி ரூபாய் ரொக்கப் பணமாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறக்கும் படையினர் மேற்கொள்ளும் சோதனைகள் தொடர்பான புகார்களை தெரிவிப்பதற்கென மாவட்டம் வாரியாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அரசியல் கட்சிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்த புகார்களை cvigil மற்றும் ecinet செயலிகளில் தெரிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்படும் புகார்கள் மீது 100 நிமிடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து, துணைத் தேர்தல் ஆணையர் திரு. Bhanu Prakash Yeturu காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பதற்றம் அளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில், தேனி மாவட்டத்தில் உள்ள மலைகிராமம் ஒன்றில் ஐந்து வாக்காளர்களுக்கென, ஒரு வாக்குச்சாவடி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ராஜசேகரன் 51 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<<

திமுக அரசு பல்லாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் புரிந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுச்சேரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், ஒரு குடும்பத்தின் நலனுக்காக திமுக செயல்படுவதாக கூறினார்.

இரண்டு ஜி அலைக்கற்றை ஊழல் மூலம் தமிழகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தியது திமுக என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கமாக திமுக திகழ்கிறது என்று அக்கட்சியின் துணை பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவிலில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், கடந்த ஐந்தாண்டுகளாக திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டார்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது திமுக தான் என்றும் திருமதி. கனிமொழி கூறினார்.

>>>>>><<<<<<<

தமிழக மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக சட்டப்பேரவை தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி, பெரிய அளவில் வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

திமுக அரசுக்கு எதிரான மக்களின் கோபம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு பெருகிவருவதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தமிழக மக்கள், ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

கடலூர் மாவட்டம், வடலூரில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

ஊழலற்ற நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்பதே வாக்காளர்களின் எண்ணமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

தமிழர்களின் நலனை காக்க திமுக அரசு தவறிவிட்டதாகவும் திரு. சீமான் குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<<

சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிபெறும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூரில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

திமுக தேர்தல் அறிக்கையில் மகளிர் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்தாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஐந்தாண்டுகளாக திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்களையும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – துரை 37 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில், காவல்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 9 கோடி ரூபாய் மதிப்பிலான நகைகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

சேலம் மாவட்ட ஆட்சியராக திரு. அருண் தம்புராஜ் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மேள தாள முழங்க, வீடு வீடாக சென்று தாம்பூல தட்டுகளுடன், ஜனநாயக திருவிழா அழைப்பிதழை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று வழங்கினார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் ஆட்சியர் திரு. விஷ்ணு மஹாஜன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகேயுள்ள பாபநாசம் சுவாமி கோவில் சித்திரை விஷு திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட வானகரம் பகுதியில் மாஞ்சா நூல் பயன்படுத்தி காற்றாடி பறக்கவிட்ட இரண்டு நபர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Meenakshi, Jaismine, லோகேஷ் மற்றும் Akash அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Meenakshi 5-0 என்ற புள்ளிக்கணக்கில் ஜப்பானின் Yuka Sadamatsu-வை வென்றார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதிஆட்டத்தில் *Jaismine, 5-0* என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் *Ziyi Chen*-ஐ வென்றார்.

ஆடவர் 85 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் *Lokesh 5-0* என்ற புள்ளிக்கணக்கில் தென்கொரியாவின் *Gichae Kim*-ஐயும், 75 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஆகாஷ், துர்க்மெனிஸ்தானின் *Yhlas Bagtyyarov*-வையும் வென்றனர்.

>>>>>><<<<<<<

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் *Abhay Singh* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், *9-11, 11-8, 3-11, 11-4, 11-8* என்ற செட்கணக்கில் எகிப்தின் *Aly Abou Eleinen*-ஐ வென்றார்.

>>>>>><<<<<<<

*Menorca* சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் *Niki Kaliyanda Poonacha* – தாய்லாந்தின் *Pruchya Isaro* இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, *6-3, 7-6* என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Siddhant Banthia* – பல்கேரியாவின் *Donski* இணையை வென்றது.

>>>>>><<<<<<<